யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூலை - 2015

# Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | இந்திய வரலாறு | நேரம் :- $1\frac{1}{2}$ மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **1 - 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப் பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) 1) நீலகிரி 2) விந்தியம் 3) இந்துகுஷ்
4) பிரம்மபுத்ரா 5) ஆரவல்லி (……..)

2) 1) நாலாந்தா 2) விக்கிரமசீலா 3) ஒதந்தபுரி
4) ஜகந்தல 5) மதுரா (……..)

3) 1) அஜந்தா 2) சாரணாத் 3) எல்லோரா
4) நாசிக் 5) பாக் (……..)

4) 1) தப்தி 2) கோசலம் 3) மகதம்
4) காசி 5) அங்கம் (……..)

5) 1) பிருதுவி 2) அக்னி 3) சூரியன்
4) வருணன் 5) இந்திரன் (……..)

❖ **6 - 10 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாதவை. அச் சோடியை தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

6) 1) காவேரி - மைசூர் பீடபூமி
2) சிந்து - இமயமலை
3) நர்மதா - விந்திய – சற்புத்திர மலைகள்
4) கோதாவரி - காரக்கோரம் மலை
5) பிரம்மபுத்திரா - திபெத்திய பீடபூமி
(……..)

7) 1) சுருதி - வேதம்
2) சபா - முதியோர் அவை
3) சதி - உடன்கட்டை ஏறுதல்
4) பணி - ஆரியரல்லாத இனக்குழு
5) சோம - யாகம்
(……..)

8) 1) பர்ஜன்னிய - செல்வத்தின் அதிபதி
2) வருணன் - வானகத்தேவன்
3) யமன் - பிதிர்களின் தேவன்
4) இந்திரன் - மழை, இடி, மின்னல் தெய்வம்
5) பிரஜாபதி - உயிருள்ளவற்றின் அதிபதி
(……..)

9) 1) சௌராஷ்டிர - கத்தியவார்
2) பிரயாகை - ஔரங்கபாத்
3) புருஷபுர - பெஷாவார்
4) இந்திரப்பிரஸ்தம் - டெல்லி
5) சாகல - சியால் கோட் (……..)

10) 1) காலாசூக - சிசுநாக
2) தனநந்த - நந்த
3) குணாள - சாளுக்கிய
4) புஸ்ஸியமித்ர - கண்வ
5) பிம்பிசார - ஹரியங்க (……..)

❖ **11 - 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள்/ கூற்றுகள்/ திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் X, Y எனும் நிரல்களில் தரப்பட்டுள்ளது. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் கூற்றுகள் திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் சரியான தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும் போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11)

| X | Y |
|---|---|
| 1) இத்சிங் | A - அராபிய எழுத்தாளர் |
| 2) மாதவபட்ட | B - சீனயாத்திரிகர் |
| 3) அல்புரூணி | C - சமஸ்கிருத கவிஞர் |
| 4) இளங்கோ அடிகள் | D - சைவ அடிகளார் |
| 5) திருமூலர் | E - தமிழ்க்கவிஞர் |

1) BCAED 2) BACED 3) BEACD
4) BAECD 5) BCEAD (……..)

12)

| X | Y |
|---|---|
| 1) தூத | A - வரியிறுப்பாளர் |
| 2) சங்கிரஹீர்திரி | B - தூதுவர் |
| 3) பாகதுக | C - படைத்தலைவன் |
| 4) சூத | D - பொருளாளர் |
| 5) சேனானி | E - தேர்ச்சாரதி |

1) BADEC 2) BDAEC 3) BAEDC
4) BDACE 5) BEDAC (……..)

13)

| X | Y |
|---|---|
| 1) இருக்குவேதம் | A - பிற்பட்ட வேதகாலம் |
| 2) தர்ம சூத்திரங்கள் | B - பௌத்தயுகம் |
| 3) சூத்திரபிடகங்கள் | C - சுங்கயுகம் |
| 4) மனுஸ்மிருதி | D - மௌரிய யுகம் |
| 5) அர்த்தசாஸ்திரம் | E - ஆரம்ப வேத காலம் |

1) ECBAD 2) EBCAD 3) EACBD
4) EABCD 5) EBACD (……..)

14)

| X | Y |
|---|---|
| 1) ஹெரடோரஸ் | A - கிரேக்க படையெடுப்புகள் |
| 2) மெகஸ்தனிஸ் | B - அர்த்தசாஸ்திரம் |
| 3) ஏரியன் | C - இராமாயணம் |
| 4) வால்மீகி | D - இன்டிகா |
| 5) கௌடில்ய | E - வடமேற்கு அரசியல்நிலை |

1) EDCAB 2) EADCB 3) EDACB
4) EACDB 5) EACBD (……..)

15) **X** **Y**

| X | Y |
|---|---|
| 1) கிராமணி | A - இனக்குழுக்களின் அமைப்பு |
| 2) ஜன | B - கூட்டிணைந்த சபை |
| 3) விஷய | C - கிராம நிர்வாகத் தலைவர் |
| 4) பூக | D - கிராமங்கள் இணைந்த நிர்வாக அலகு |
| 5) சமிதி | E - விஷயவின் சில ஒன்றிணைந்த நிர்வாக அலகு |

1) CDEBA 2) CEBDA 3) CDBEA
4) CBDEA 5) CEDBA (……..)

❖ **16 - 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று உரிய தலைப்புடன் பொருந்தாது அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16) சிந்து - கங்கை சமவெளி
1) மொஹெஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகம் ஒன்று சிந்து வெளியில் உதயமாகி பிரசித்தி பெற்றது.
2) கங்கைச் சமவெளியின் வளம் காரணமாக மௌரிய குப்த பேரரசுகளின் சாம்ராச்சியங்கள் உதயமாகின.
3) பனிப்பட் பள்ளத்தாக்கினூடாக அலெக்சாந்தர் வட இந்தியா மீது படையெடுத்தார்.
4) இமய மலைக்கும் பெருவனத்துக்கும் இடையிலமைந்த பனிப்பட் பள்ளத்தாக்கு மேற்கிலிருந்து வட இந்தியாவை அடைவதற்கான நுழைவாயிலாக அமைந்தது.
5) இந்நிலப் பகுதிகளின் வளங்களினால் கவரப்பட்ட அந்நியர்கள் இந்தியா மீது படையெடுத்தனர்.
(……..)

17) தென்னிந்தியாவும் - மௌரியரும்
1) சேரர் குப்தப் பேரரசுடன் நெருக்கமான வணிகத் தொடர்பை கொண்டிருந்தனர்.
2) தென்னிந்தியாவில் மௌரியர்களுக்குப் பிற்பட்ட காலத்திலும் சேர, சோழ, பாண்டியர் சுதந்திரமான அரசர்களாவர்.
3) கி.பி இரண்டாம் நூற்றாண்டுச் சோழ மன்னர்களுள் கரிகாலன் சிறப்பு மிக்க ஒருவன்.
4) பாண்டிய தேசத்தில் பெண்ணொருத்தி ஆட்சி செய்தாளென சமகாலத்து மேனாட்டு நூலாசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.
5) புலவர்களின் மூன்று அவையான சங்கங்கள் பாண்டிய மன்னரின் ஆதரவிலே கூடின.(……..)

18) மகத இராச்சியம்
1) கி.மு 6ம் நூற்றாண்டிலுள்ள பதினாறு மகாஜன பதங்களில் மகதம் ஒன்றாகும்.
2) பிம்பிசாரன் அங்க தேசத்தைக் கைப்பற்றியதோடு மகதத்தின் எழுச்சி ஆரம்பமாகியது.
3) மேலாதிக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நான்கு மகாஜனபதங்களுக்கு இடையில் நடந்த போரில் மகதம் வெற்றி பெற்றது.
4) மௌரியர்களுக்கு முன்பு மகத இராச்சியத்தை ஹரியங்க, சிசுநாக, நந்த எனும் வம்சத்தவர் ஆட்சி புரிந்தனர்.
5) மௌரியரின் ஆட்சி ஏற்பட்ட பின் பாடலிபுத்திரம் மகதத்தின் இராசதானி ஆனது. (……..)

19) சிந்துவெளி மக்களின் சமய நம்பிக்கைகள்
1) தாய்த் தெய்வ வணக்கம்
2) சிவனைப் பசுபதியாக வழிபடல்
3) நீர் பரிசுத்தமானது எனக் கொள்ளப்பட்டது
4) நரபலி
5) மர வழிபாடு
(……..)

20) சிந்து வெளி நாகரிகத்தின் தளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஏதுவான காரணங்கள்
1) வெள்ளப்பெருக்கு
2) இரு பெரிய நகரங்களுக்கிடையிலான ஆதிக்கப்போட்டி
3) சுற்றாடலில் ஏற்பட்ட மாறுதல்கள்
4) தொற்றுநோய்கள்
5) ஆரிய படையெடுப்பு (……..)

(20x1 = 20 புள்ளிகள்)

பகுதி II

❖ முதலாம் வினா உட்பட இரு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**1)** தரப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு அவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றி சிறுகுறிப்புகள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1) நர்மதா நதி | 2) மகதம் | 3) தாம்ரலிப்தி | 4) லோத்தால் |
| 5) போலன் | 6) தஞ்சாவூர் | 7) ஆரவல்லி | 8) கன்னோசி |

(8x1= 8 புள்ளிகள்)
(2x5= 10 புள்ளிகள்)
(10+8= 18 புள்ளிகள்)

**2)** பிம்பிசாரனின் ஆட்சிக் காலம் முதல் அசோகனின் ஆட்சிக் காலம் முடியும் வரை மகதம் எழுச்சி பெறுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்களைப் பரிசீலனை செய்க.

(12 புள்ளிகள்)

**3)** வேத காலத்து சமூக அரசியல் நிலைகளின் பிரதான அம்சங்களை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

**4)** மௌரியர்களின் ஆதிக்கத்தினை வட இந்தியாவில் ஏற்படுத்துவதில் சந்திரகுப்த மௌரியன் கொண்டிருந்த பங்களிப்பை ஆராய்க. (12 புள்ளிகள்)

